எம்.சி.ஓ.பி எண்: 553/2025 தேதி: 20.01.2026

மசா. : 1

பெயர் :ஏழுமலை

த/பெ. : சுந்தரம்

வயது : 44

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. மருத்துவமனையிலிருந்து எனக்கு தகவல் கிடைத்தது. புகார் என் தம்பி கொடுத்தார். விபத்தில் இறந்தது என் மகள். இறக்கும் போது அவருக்கு வயது 19. விபத்து சமயத்தில் என் மகள் ஸ்க்கூட்டியில் பின்னால் அமர்ந்து சென்றார். அவருடன் படிக்கும் நபர் ஸ்க்கூட்டியை ஓட்டிச்சென்றார். பஸ் பின்னால் வந்து இடித்ததாக நான் சத்தியபிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளது பார்க்காத விபத்தை தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. இருசக்கரவாகனத்தை ஓட்டியவரின் பெயர் தெரியாது. வண்டிக்கு காப்பீடு உள்ளதா என்றால் தெரியாது. இருசக்கரவாகனத்தை ஓட்டியவரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனத்தின் ஆர்சி தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அவரையும் வாகனத்தின் காப்பீட்டாளரையும் , உரிமையாளரையும் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்காததால் இந்த மனு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பஸ் மீதுதான் தவறு என்பதை நிரூபிக்க குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகள் சென்ற இருசக்கரவாகன ஓட்டியின் மீது தவறு உள்ள காரணத்தால்தான் மாதிரி வரைபடம், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகள் பி.இ படித்துக்கொண்டிருந்தாள். நான் டிரைவராக பணிபுரிகிறேன். நான் என் மகளை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. என் மகள் கல்லூாி படிப்பு படித்ததால் அவர் எந்த வருமானமும் ஈட்டவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என் மகள் சென்ற இருசக்கரவாகன ஓட்டியின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.